(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No. 155/2026**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.6 (LW.9)

| | | |
|---|---|---|
| Name | : | வரதராஜ் |
| Father's Name | : | பொன்னுசாமி |
| Village | : | குமரமங்கலம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : | 54 |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **17.08.2026**

**முதல் விசாரணை:–**

நான் தற்பொழுது எலச்சிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.12.2025ம் தேதி மாலை 16.45 மணிக்கு எலச்சிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது கருப்பண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.204/2025, ச.பி.281, 125(a) BNS ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் கார்த்திக் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கருப்பண்ணன், சித்ரா, மனோகரன், சண்முகம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் நிலையம் ஆஜரான எதிரி ரங்கநாதன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட வாகனமான TN 34 AJ 9502 TVS Electric Bike இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.உமாமகேஸ்வரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். TN 34 AJ 9502 TVS Electric Bike இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட கருப்பண்ணன் என்பவருக்கு சிகிச்சை அளித்த கங்கா மருத்துவமனை மருத்துவர் ராய் வில்சன் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். அவைகள் விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மருத்துவர் வழங்கிய காயச்சான்றிழ் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 281,125(a) BNS லிருந்து பிரிவுகள் 281,125(b) BNS ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 281,125(b) BNS –ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.–**

விபத்து நடந்த இடம் எலச்சிபாளையம் பஸ் ஸ்டாப் என்றால் சரிதான். திருச்செங்கோடு – இராசிபுரம் மெயின்ரோடு என்றால் சரிதான். அது கிழமேல் ரோடு என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட நபர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடந்தபோது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்தானது அடிபட்ட நபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் பொய்யான புகாரைப்பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யான இறுதி

அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அடிபட்ட நபர் இழப்பீடு பெற வேண்டி எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> – இல்லை.**

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.08.17 17:40:39 +0530